*6*

# இயேசு ஞானஸ்நானம் பெறுதல்

## (3:13-17)

*இயேசுவின் ஞானஸ்நானத்தைப் புரிந்து கொள்வதற்குக் கடினமான ஒன்றாக, மக்களில் பலர் கண்டுள்ளனர். இயேசுவுக்கு பாவ மன்னிப்பு தேவைப்பட்டதில்லை. ஞானஸ்நானம் பெற்றதால், "எல்லா நீதியையும் நிறைவேற்றுகிறார்" என்ற வகையில், வேதவசனத்தின் இந்தப்பகுதி, வல்லமை நிறைந்ததாக உள்ளது.*

## தெய்வீக முடிவு *(3:13, 14)*

**[13]அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். [14]யோவான் அவருக்குத் தடை செய்து: "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" என்றான்.**

**வசனம் 13.** **இயேசு** தமது வெளியரங்கமான வாழ்விற்குத் தயார் செய்துகொண்டிருக்கையில், ஞானஸ்நானத்திற்கான ஒரு வேண்டுகோளுடன் அவர் **யோவானை** அணுகியதன் மூலம் அதைத் தொடங்கினார். **வந்தார்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லானது, யோவானின் ஊழியத்தினுடைய தொடக்கத்தில் "வந்து" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள அதே வினைச்சொல்லாக உள்ளது (3:1). இயேசுவின் வருகையைக் குறித்து டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், "இப்போது சுவிசேஷத்தின் பிரதான பாத்திரம் மேடையின் மீது வருகிறார்" என்று உரைத்தார்.[1]

இயேசு ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது, அவர் நாசரேத்தூர் கூட்டிச் செல்லப்பட்டதற்கும் (2:23) பின்பு அவர் ஞானஸ்நானம் பெற்றதற்கும் இடைப்பட்ட காலம்பற்றி. குறிப்பிடுதல் எதையும், மத்தேயு சுவிசேஷ விபரத்தில் நாம் கொண்டிருப்பதில்லை. இந்த வேளையில் இயேசு, "ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார்" என்று லூக்கா 3:23ம் வசனம் நமக்குத் தகவல் தருகிறது. அவர் **கலிலேயாவில்** இருந்த "நாசரேத்தூரில்" இருந்து (மாற்கு 1:9), யோவானிடத்தில் **ஞானஸ்நானம் பெறும்படிக்கு**, அவர் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்த **யோர்தானுக்கு** அக்கரையில் "பெத்தாபராவுக்கு" (யோவான் 1:28) வந்தார்.

**வசனம் 14.** இயேசு யோவானிடம் வந்தபோது, அவர் மேசியா என்று அந்தத் தீர்க்கதரிசி *நினைத்தார்*. இவ்விரு மனிதர்களுக்கும் இடையில் ஆறுமாதமே

*வயது வித்தியாசம் இருந்தது, இவர்கள் இருவரும் உறவினர்களாகவும் இருந்தனர் (லூக்கா 1:36). அவர்கள் ஒருவர் மற்றவரை, வளர்ந்து வரும்போது எவ்வளவு அதிகமாய்க் கண்டனர் என்பது யூகத்திற்குரிய விஷயமாக உள்ளது. அவர்கள் தங்கள் இளமைப் பிராய ஆண்டுகளில், எருசலேமில் பஸ்கா பண்டிகைக் கொண்டாட்டங்கள் சிலவற்றில் சந்தித்து இருக்கலாம் (காண்க லூக்கா 2:41, 42). இருப்பினும், இவ்விரு மனிதர்களும் ஒருக்காலும் சந்தித்திராத அல்லது சற்றுக்காலம் ஒருவர் மற்றவரைக் கண்டிராத நிலையே இருந்திருக்கலாம். ஒருவேளை, யோவான் பல ஆண்டுகளாக தனிமையில் நிலைத்து இருந்திருக்கலாம் (லூக்கா 1:80).*

*முதலில் யோவான், இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தயங்கினார். அவர், **"நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?"** என்று கூறினார். கிரேக்க வசனத்தில் யோவான் கேள்வி, அழுத்தமாகக் கூறப்பட்டதாக உள்ளது. "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" என்பது நேர்ப்பொருளான மொழிபெயர்ப்பாக இருக்கும். மத்தேயு சுவிசேஷ எழுத்தாளர் மாத்திரமே, இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க யோவான் முதலில் தயங்கியதைப் பற்றிப் பதிவு செய்துள்ளார். டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள், "ஒருவேளை மத்தேயு, யோவானால் ஞானஸ்நானம் பெறும்படி அவரிடத்தில் இயேசு தம்மை ஒப்புக்கொடுத்ததால், இயேசு யோவானை விடத் தாழ்ந்தவராகவே இருக்க வேண்டும் என்று உரிமைகோரிய, யோவானின் பின்பற்றாளர்களால் எரிச்சல் அடைந்திருக்கலாம்" என்று விளக்கம் அளித்தார்.[2] இதன் விளைவாக அவர், யோவானிடத்தில் இருந்து வந்த இந்த வார்த்தைகளை உள்ளடக்கியதன் மூலம், இந்தத் தவறான கண்ணோட்டத்தைத் திருத்தினார். மத்தேயு இந்த சுவிசேஷப் புத்தகத்தை எழுதிய காலமான, முதல் நூற்றாண்டின் மையப்பகுதியின் போதும்கூட, யோவானுடைய சீஷர்கள் இருந்தனர் என்பதால், இந்தக் கருத்து நியாயமானதாகத் தோன்றுகிறது (காண்க நடபடிகள் 19:1-7). மற்றும், மான்டேயன் மதப்பிரிவினர் மத்தியில் இந்நாட்கள் வரையிலும் [இப்பொழுதும்] கூட, இயேசு யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் தாழ்ந்தவராக இருந்தார் என்ற பொய்யான கருத்து நிலைத்து இருக்கிறது.[3]*

## *தெய்வீக நோக்கம் (3:15)*

***15இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.***

***வசனம் 15.** இயேசு, **"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"** என்று கூறியதன் மூலமாக, யோவானுக்குப் பதில் அளித்தார். முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, யோவான் "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தை" கொடுத்துக் கொண்டிருந்தார் (மாற்கு 1:4) - ஆனால் இயேசு, "பாவம் அறியாதவராக" இருந்தார் (2 கொரிந்தியர் 5:21; காண்க யோவான் 8:29; எபிரெயர் 4:15; 7:26; 1 பேதுரு 2:21, 22; 1 யோவான் 3:5). இருப்பினும்*

அவர், "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரா"க முடிவதற்கு (எபிரெயர் 5:9), தேவனுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. "எல்லா நீதியையும் நிறைவேற்றுவது" என்ற சொற்றொடரின் மிகச்சரியான அர்த்தம் விவாதிக்கப்படுவதாக இருக்கையில், இயேசுவின் ஞானஸ்நானத்தில், அவரைப் பற்றிய பின்வரும் கருத்துக்கள் நிச்சயமானவையாக உள்ளன:

1. அவர் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார் (21:25, 32; லூக்கா 7:29, 30).
2. அவர் யோவானுடைய ஊழியத்தையும் ஞானஸ்நானத்தையும் அங்கீகரித்தார்.
3. அவர் மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணத்தை அமைத்தார்.
4. அவர் பாவிகளுடன் தம்மைத் தாழ்மையாக அடையாளப்படுத்தினார்.
5. அவர் பாவிகளை நீதிமான்களாக்குவதற்காகத் தாம் அடையவிருந்த மரணத்தில் முடித்து வைக்கப்பட இருந்த தமது ஊழியத்தைத் தொடங்கினார் (ஏசாயா 53:11; மத்தேயு 1:21).
6. அவர் மேசியா என்று யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தார், ஆகையால் அவரை யோவான் இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்தினார் (யோவான் 1:31, 32).

**அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்** என்பது, இயேசுவின் விவாதத்தால் யோவான் இணங்கினார் மற்றும் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

## தெய்வீக சாட்சியம் (3:16, 17)

**16இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். 17அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது.**

வசனம் 16. **இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே.** இந்தக் கூற்றில் இருந்து, அவர் முற்றிலுமாக முழுக்காட்டப்பட்டார் என்று உய்த்துணர்வது அத்தியாவசியமாக உள்ளது, இதுவே "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையின் அர்த்தமாக உள்ளது (காண்க நடபடிகள் 8:38, 39). அந்த வேளையில் **வானம் அவருக்கு திறக்கப்பட்டது.** இந்த மொழிநடையானது தேவனுடைய வெளிப்பாட்டின் அனுபவங்களுக்குப் பொதுவான சித்தரிப்பாக உள்ளது (ஏசாயா 64:1; எசேக்கியேல் 1:1; யோவான் 1:51; நடபடிகள் 7:56; 10:11; வெளிப்படுத்தின விசேஷம் 4:1). இதைத் தொடர்ந்து வந்த நிகழ்வு, தரிசன அனுபவமா அல்லது இயல்பில் நடந்த உண்மை நிலையா என்பது விவாதத்திற்கு உரியதாக உள்ளது. ஆவியானவர்

இறங்கி வந்ததைக் கண்டதும் தேவனுடைய குரலைக் கேட்டதும், அங்கிருந்த ஒவ்வொருவருமா அல்லது யோவானும் இயேசுவும் மாத்திரமா என்பது இந்த நிகழ்ச்சி சார்ந்த கேள்வியாக உள்ளது (காண்க யோவான் 5:37).

**தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.** ஆவியானவரைப் புறாவிற்கு ஒப்பிடுதல் என்பது, அவர் இறங்கி வந்த வகையுடன் தொடர்புடைய விதத்தில் புரிந்து கொள்ளப்பட முடியும். இருப்பினும், லூக்காவின் ஒப்பீடு, உடல்ரீதியான தோற்றத்தைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறது: "பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார்" (லூக்கா 3:22). புறா என்பது மென்மை மற்றும் ஒன்றும் அறியாத்தன்மை ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது (10:16). மேலும் இந்தக் காலகட்டத்தின் போது யூதத்துவத்தில், பரிசுத்த ஆவியானவர் புறாவுடன் இணைவு செய்யப்பட்டிருக்கச் சாத்தியம் இருந்தது. G. F. ஹேசல் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்,

> அப்போஸ்தலர்கள் காலத்தில் வாழ்ந்த இளைஞரான, ரபீ பென் சோமா என்பவர், ரபூத்துவப் பாரம்பரியத்தை, "புறா ஒன்று தனது குஞ்சுகளின் மீது அவற்றைத் தொடாது அமர்ந்து பாதுகாப்பது போன்று, தேவனுடைய ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார் [ஆதியாகமம் 1:2]" என்று மேற்கோள் காண்பித்தார் [Talmud *Hagigah* 15a].[4]

புறா என்பது யாருடைய வழியை யோவான் ஆயத்தம் செய்துகொண்டிருந்தாரோ, அவரை அடையாளப்படுத்துவதற்கு, யோவானுக்குக் கொடுக்கப் பட்டிருந்த அடையாளமாக இருந்தது. இயேசு மேசியாவாக இருந்தார் என்று யோவான் *நினைத்தாலும்* - இதுவே அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க அவர் தயங்கியதை விளக்குகிறது - அவர்மீது ஆவியானவர் இறங்கி வரும் வரையிலும் அவரைப் பற்றி யோவான் நிச்சயமாக ஏதும் *அறியாதிருந்தார்* (யோவான் 1:29-34). இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்பதற்கு, புறாவானது அனுபவ ஆதாரமாகச் செயல்பட்டது.

இந்த நிகழ்வு, ஏசாயாவினால் ஏற்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றியது: "கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்" (ஏசாயா 11:2); "என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்" (ஏசாயா 42:1); மற்றும் "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்" (ஏசாயா 61:1). இவர் பரிசுத்த ஆவியானவராக இருந்தார், இவர் தேவனுடைய இராஜ்யத்தின் மீது கிறிஸ்துவை அரசராக அபிஷேகம் பண்ணினார். மேலும், இயேசு இந்த இடத்தை விட்டுச்சென்றபோது, அவர் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் புறப்பட்டுச் சென்று, எல்லா வகையான வியாதிகளையும் குணமாக்கி, அசுத்த ஆவிகளைத் துரத்தி - அவரது இராஜ்யத்திற்கு எதிராக இருந்த துனமார்க்க சக்திகளைத் தூக்கியெறிந்தார் (12:28; நடபடிகள் 10:38).

**வசனம் 17.** பிதாவானவர், **"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"** என்று அறிவித்தார். தேவன் தமது குமாரனுடைய தெய்வீகத்தன்மை பற்றி அறிவித்த மூன்று நிகழ்வுகளில், இது முதலாவதாக இருந்தது (காண்க 17:5; யோவான் 12:28). இந்த வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் இருந்து வந்த நேரடியான மேற்கோளாக இருப்பதில்லை, ஆனால் இவைகள் குறிப்பிட்ட ஆய்வுக்கருத்துக்களின் எச்சமாக உள்ளன. இயேசு

*தெய்வீக குமாரனாக, கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவராக இருக்கிறார் (சங்கீதம் 2:7; காண்க நடபடிகள் 13:33; எபிரெயர் 1:5; 5:5). அவர் தேவனால் அன்புகூரப்பட்டவராக மற்றும் அவருக்கு மிகவும் பிரியமானவராக இருக்கிறார் - நான் தொரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே" (ஏசாயா 42:1). இந்த மொழிநடை, ஆபிரகாம் தமக்கு மிகவும் அன்பானவராக இருந்தவரும், வாக்குத்தத்தத்தின் மகனுமான ஈசாக்கைப் பலியிடும்படி அழைக்கப்பட்டபோது, ஈசாக்குக்குப் பயன்படுத்தப்பட்ட அதே மொழிநடையாக உள்ளது (ஆதியாகமம் 22:2).*

*தேவத்துவத்தின் மூன்று நபர்களும்[5] இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது பிரசன்னமாகி இருந்தனர். கிறிஸ்து யோவானுடன் தண்ணீரில் இருந்தார். அவர்மீது, பரிசுத்த ஆவியானவர் புறாவின் வடிவத்தில் வந்து இறங்கினார். இந்த விஷயங்கள் நடந்துகொண்டிருக்கையில், பரலோகத்தில் இருந்து தேவன் பேசி தமது குமாரன் மீது தாம் சந்தோஷமாயிருப்பதை அறிவித்தார். இயேசுவின், ஞானஸ்நானத்தின்போது, தெய்வீகத்துவத்தின் மூன்று உறுப்பினர்களும் பிரசன்னமாகி இருந்தனர் என்பது, தேவத்துவத்தில் மூவர் உள்ளனர் என்ற கொள்கையை மறுதலிக்கும் எவரொருவருக்கும், வெற்றிகொள்ள இயலாத பிரச்சனையாக உள்ளது. வேதாகமம் "திரித்துவம்" என்ற வார்த்தையை ஒருபோதும் பயன்படுத்தாது இருக்கையில், பல வேதவசனங்கள், தேவத்துவத்தில் மூவர் உள்ளனர் என்ற இந்தக் கருத்து செல்லத்தக்கது என்பதை உறுதிப்படுத்துகின்றன (28:19; யோவான் 1:1-3, 14; 17:1-26; 2 கொரிந்தியர் 13:14; யூதா 20, 21; காண்க மாற்கு 12:29). இயேசு தேவனாக இருந்தார் ஆனால் அவர் ஒரு மனிதராகி நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1:1, 14).*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (3:13-17)*

*இயேசு ஞானஸ்நானம் பெறுதல் மீதான பாடம் ஒன்றைப் பின்வரும் கருத்துக்களுடன் மேம்படுத்த முடியும்:*

1. *தெய்வீக முடிவு (3:13, 14);*
2. *தெய்வீக நோக்கம் (3:15);*
3. *தெய்வீக சாட்சியம் (3:16);*
4. *தெய்வீக பிரசன்னம் (3:17).*

## *இயேசு ஞானஸ்நானம் பெற்றதும் நாம் ஞானஸ்நானம் பெறுதலும் (3:13-17)*

*இயேசு தாம் ஞானஸ்நானம் பெற்றதில், இன்றைய நாட்களில் நமக்கு ஒரு முன்மாதிரியாகப் பயன்படுகிறார் என்று சிலவேளைகளில் விவாதிக்கப்படுகிறது. இந்தக் கருத்தில் உண்மை சில இருக்கையில், இந்த ஒப்பீடு, சிக்கலானதாகவும் திறனாய்வுடன் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதாகவும் உள்ளது.*

*இயேசு பெற்ற ஞானஸ்நானத்திற்கும் இன்றைய ஞானஸ்நானத்திற்கும் இடையில், நாம் சில ஒப்பீடுகளைக்*

காணமுடியும். புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ளபடி, ஞானஸ்நானம் என்பது, இன்னமும் முழுக்காட்டுதலாகவும் (ஒருவர் தமக்குத்தாமே நிகழ்த்திக் கொள்ளுதல் என்பதற்கு நேரெதிராக) இன்னொருவரால் நிகழ்த்தப்படுவதாகவும் உள்ளது. மற்றும், இயேசு செய்ததைப் போன்றே [ஞானஸ்நானம் பெறும்] ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படிய உண்மையான விருப்பம் கொண்டிருக்க வேண்டும். இதற்கு அப்பால், இன்றைய நாட்களில் ஒருவர் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் பெறுகையில், அவர் - அற்புதம் செய்யும் வகையில் இல்லாதிருந்தாலும் - பரிசுத்த ஆவியானவரை ஒரு கொடையாகப் பெறுகிறார் (நடபடிகள் 2:38) மற்றும் அவர் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறார் (கலாத்தியர் 3:26, 27).[6] இயேசுதாமே ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்பட்டு, பிதாவானவரால் அவரது குமாரன் என்று உறுதிப்படுத்தப்பட்டார். இயேசு பெற்ற ஞானஸ்நானமும் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமும் ஆகிய இரண்டுமே, தேவனை சேவித்தலின் (ஊழியத்தின்) தொடக்கம் என்ற வகையில் கண்ணோக்கப்பட முடியும்.

பல ஒற்றுமைகள் இருப்பது போலவே, பல வேறுபாடுகளும் உள்ளன. இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்றார், அவரது ஆயத்த ஞானஸ்நானம் இனியும் செல்லத்தக்கதாக இருப்பதில்லை (நடபடிகள் 19:1-7). கிறிஸ்து சிலுவையில் மரித்து, புதிய உடன்படிக்கையை நிலைநாட்டி இருக்கிறார். ஆகையால், புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம், சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த கர்த்தர் மீது விசுவாசத்தை உள்ளடக்குகிறது (மாற்கு 16:16). இது மனந்திரும்புதலையும் கேட்கிறது, இது கிறிஸ்து பாவமற்றவராக இருந்ததால் அவரது ஞானஸ்நானத்தில் இணைக்கப்படவில்லை. மனஸ்தாபப்படும் விசுவாசி, தமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக - கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப் படுவதற்காக - புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிகிறார் (நடபடிகள் 2:38; 22:16; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:5). அந்த செயலில் அவர், கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைச் சித்தரிக்கிறார் (ரோமர் 6:3, 4). அவர் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய நபராகிறார் (ரோமர் 6) மற்றும் கிறிஸ்துவினால் இராஜ்யத்திற்குள் (சபைக்குள்) சேர்க்கப்படுகிறார் (நடபடிகள் 2:47; காண்க 1 கொரிந்தியர் 12:13).

ஒவ்வொரு நபரும் ஞானஸ்நானம் பெறுதலில், கிறிஸ்துவின் கீழ்ப்படிதலைப் போலச் செய்ய வேண்டும் என்றிருக்கையில், அவர் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் தனித்தன்மையான அர்த்தம் பற்றியும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். இயேசு பெற்ற ஞானஸ்நானமும் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமும் ஒன்றல்ல.

---

குறிப்புகள்

[1]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 55. [2]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 20. [3]மான்டேயியம் என்பது ஈராக் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் இன்னமும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் தோன்றிய பழங்கால நாஸ்டிக் மதமாகும். மான்டேயர்கள், பராம்பரியக் கிறிஸ்தவம் மற்றும் யூதத்துவம் ஆகியவற்றைப் புறக்கணிக்கின்றனர், ஆனால் யோவான் ஸ்நானனைத்

*தங்கள் தீர்க்கதரிசிகளில் ஒருவராக உயர்த்துகின்றனர். அவர்களின் மார்க்கம், மாயாவாதம், இரட்டையியம் மற்றும் விரிவான சடங்காச்சாரங்கள் ஆகிய குணங்களைக் கொண்டுள்ளது.* [4]G. F. Hasel, "Dove," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:988. [5]*மூன்று கிரேக்க வார்த்தைகள்* KJV *வேதாகமத்தில்* "Godhead" [*"தேவத்துவம்"*] *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன (நடபடிகள் 17:29* [*இது தமிழ் வேதாகமத்தில் "தெய்வம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது*]*; ரோமர் 1:20* [*இது தமிழ் வேதாகமத்தில் "தேவத்துவம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது*]*; கொலோசெயர் 2:9* [*இதுவும் தமிழ் வேதாகமத்தில் "தேவத்துவம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது*]*).* [6]Anthony Lee Ash, *The Gospel According to Luke*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1972), 77.